<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 34/2022**

2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய நிர்மலா **PW1.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 17.03.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : நிர்மலா | | |
| Father /Husband Name | : பன்னீர் செல்வம் | Court | : |
| Village | : கடக்கம் | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 44/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>**முதல் விசாரணை:**</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

04.02.2000 தேதியிட்ட வாதியின் கணவர் பன்னீர்செல்வம் தாவா சொத்திற்கு செலுத்திய வாய்தா ரசீது **வா.சா.ஆ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 30.03.2022 தேதியிட்ட வாதி தாவா சொத்திற்கு செலுத்திய வாய்தா ரசீது **வா.சா.ஆ. 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.03.2022 தேதியிட்ட தாவா சொத்திற்கு மாரிமுத்து பெயரில் உள்ள பட்டா கணினி நகல் **வா.சா.ஆ. 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 05.09.2021 தேதியிட்ட வாதியின் கணவர் பன்னீர்செல்வத்தின் இறப்பு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ. 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 02.02.2022 தேதியிட்ட வாதியின் கணவர் பன்னீர்செல்வத்தின் வாரிசு சான்றிதழின் கணினி நகல் **வா.சா.ஆ. 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

ஆவணங்கள் மேலும் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.